வழக்கறிஞர் திரு. அய்யாத்துரை, திருப்பரங்குன்றம் காவல்துறை துணை ஆய்வாளரால் தாக்கப்பட்டதாகக் கூறப் படும் நிகழ்ச்சியினை அடுத்து எழுந்துள்ள சந்தேகங்களை நிவர்த்திக்கும் பொருட்டும், தீவிர விசாரணை செய்வதற்காக வும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் போலீஸ் சட்டம் பி.எஸ்.ஓ. 145-ன் கீழ், மதுரை மாவட்ட கோட்டாட்சித் தலை வரைக் கொண்டு ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் பேசுகிறபோது இது சம்பந்தமாக உயர்நீதிமன்ற நீதிபதியை வைத்து விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்த அளவுக்கு சந்தேகங்கள் மலிந்து கிடக்கின்றன என்று நிச்சய மாகக் கருதுவதற்கில்லை என்ற காரணத்தாலும், உண்மை களை விளக்கமாகத் தெரிவிக்கும் நிலைமை இருப்பதால், அர சாங்கமே நடவடிக்கை எடுத்து தவறு செய்தவர்களுக்குத் தக்க தண்டனையை அளிக்க இந்த அரசு தயங்காது என்பதை மட் டும் எடுத்துச் சொல்லி இது சம்பந்தமாக போராட்டங்களில் ஈடுபட்ட வழக்கறிஞர்கள் நிச்சயமாக அரசாங்கம் தக்க பரி காரம் காணும் என்ற அடிப்படையில் மேலும் போராட்டத்தைத் தீவிரப் படுத்த வேண்டியதில்லை என்று கேட்டுக் கொண்டு இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண் டிய தேவையில்லை. பொரும்பாலான பொருள்களைப் பற்றி இங்கே விவாதித்துவிட்டோம் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக் கப்படுகிறது.

(இ) திருவாவடுதுறை கிராமத்தில் திரு. முத்துக்குமார சுவாமி தாக்கப்பெற்று மரணம் அடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கீழத் தஞ்சை பாலையூர் போலீஸ் சரகத்தில் பேராவூர் என்ற இடத்தில் திருவாவடுதுறை கிராமத்தில் திரு. முத்துக்குமாரசாமி என் பவர் 26-2-1979 அன்று இரவு பயங்கரமான ஆயுதங்களால் தாக்கப்பட்டு அதே இடத்தில் மரணம் அடைந்ததால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து

விவாதிக்க பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு திரு. ராஜமாணிக்கம் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத்தக்க அளவுக்கு அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, 26—2—1979 இரவு 7–30 மணி அளவில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பாலையூர் போலீஸ் சரகத்தில் என்னுடைய வீட்டிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் பேராவூர் என்ற இடத்தில் திருவாவடுதுறை கிராமத் தலைவர் வில்லேஜ் முன்சிப் முத்துக்குமாரசாமி என்பவர் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கப்பட்டு அதே இடத்தில் இறந்திருக்கிறார்கள். இப்போது அந்த இடத்தில் ஒரு பதட்டநிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இதே சட்டமன்றத்தில் 26-ஆம் தேதி அன்று இரவு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில்தான் அமைதியான சூழ்நிலை இருக்கிறது என்று பேசினார்கள்.

மற்ற மாநிலங்களில் கொலையும் கொள்ளையும் அதிகமாக இருக்கின்றது என்ற புள்ளிவிவரத்தைச் சொல்லி நம்முடைய மாலநிலத்திலே கொலையும் கொள்ளையும் குறைந்து இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். ஆனால் அதே இரவு 7½ மணிக்கு என்னுடைய வீட்டிற்கு அருகாமையில் ஒரு பயங்கரமான கொலை நடந்திருக்கிறது. அதே பாலையூர் போலீஸ் சரகத்தில் அடுக்கடுக்காத் தொடர்ந்தாற்போல் கொலைகளும் கொள்ளைகளும் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கு ஆதாரமாக 15–8–1978 அன்றைய தினம் அதே பேராவூரில் சாம்பசிவய்யர்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்தப் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அதைப்பற்றித்தான் பேசவேண்டும், வேறு பேசக்கூடாது. அதை மட்டும் பேசுங்கள்.

திரு. இரெ. இராசமணிக்கம் : நம்முடைய முத்துக்குமாரசாமி அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள், அதற்கு யாரைச் சந்தேகப்படுகிறார்களோ அவர்கள் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான என்னையே கொலைசெய்வதற்காக 4, 5 மாதங்களாக சுற்றி வருகிறார்கள் என்று எனக்கு தகவல் வருகிறது. இதைப்பற்றி நான் காவல் துறையினிடத்திலே தெரிவித்திருக்கிறேன். பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து தருகிறோம் என்று அவர்கள் சொல்லியும்

அவர்கள் சொல்லி 4 மாதங்களுக்குள்ளாக என்வீட்டுக்கு அருகாமையில் கொலை நடந்திருக்கிறது. அந்தப்பகுதியிலே உள்ள பொதுமக்கள் என்னையே சுற்றிக்கொண்டு பாதுகாப்புத் தரக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அடுத்து சட்டமன்ற உறுப் பினர் இராசமாணிக்கம் உயிருக்கு ஏதோ ஆபத்து இருக்கிறது என்று பரவலாக பேசக்கூடிய நிலைமை இருக்கிறது. 3—3—1979-ஆம் தேதி இரவு என்னுடைய ஊருக்கு நான் செல்கிறபோது நாங்கள் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் அது எங்களுடைய பொறுப்பு என்று பொதுமக்கள் சாலைகளிலே காத்துக்கொண்டு இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி ஒரு பதட்டமான சூழ்நிலை இருக்கிறது. இதை முக்கியமான பிரச்சினையாகக் கருதி இந்த மன்றத்திலே விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இப்படிப்பட்ட சம்பவம் தமிழ்நாட்டிலே நடக்கக்கூடாது, முத்துக்குமாரசாமி அவர்கள் பயங்கரமாக, கன்ட்ரகோடாரி என்ற ஆயுதத்தால் 15 இடங் களிலே தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். கோரமான சம்பவம். ஆகவே இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து தன்னுடைய உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நிச்சயமாக இந்த அரசைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அத்தகைய அச்சம் இருக்குமானால் தகுந்த பாதுகாப்பைத் தருவதற்கு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, தஞ்சை மாவட்டத்திலே, சட்டமன்ற உறுப்பினர் ஜெயராஜ் அவர்கள் இருந்த காலத்திலிருந்தே இது போன்று அவ்வப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பொதுத் தொண்டில் ஈடுபடுகின்ற முக்கி யஸ்தர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருந்து வருகின்றன என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து நாம் நன்கு அறிந்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன உணர்வுகளின் அடிப்படையில் தஞ்சை மாவட்டக் காவல் துறையும், தலைமைக் காவல் துறை யும் நிச்சயமாகக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவாவடுதுறை கிராமத் தலைவர் முத்துக்குமாரசாமிப் பிள்ளை நச்சினார்க்குடியிலேயிருந்து 26—2—1979 மாலை சுமார் $7\frac{1}{2}$ மணிக்குத் திரும்பி வந்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அடையாளம் தெரியாத நபர்களால் பேராவூர் அருகாமையில் பாலையூர் காவல் நிலைய எல்லையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

1979 மார்ச் 5] **[திரு. ச. இராமச்சந்திரன்]**

கொலை செய்யப்பட்ட இடத்தில் நக்ஸலைட்டுகளின் பிரசாரத் துண்டுகள் காணக் கிடைக்கப் பெற்றன. அதிலே போலீஸ் நாய்களை வஞ்சம் தீர்ப்போம், ஆயுதப் புரட்சி ஓங்குக, சாருமஜும்தார் பாதையே நமது பாதை, ஏ.ஐ.டி.எம்.கே. காங்கிரஸ், சி.பி.ஐ. ஒழிக என்ற கோஷங்களோடு இந்தத்துண்டுப், பிரசுரங்கள் காணக் கிடைக்கப்பெற்றன. இந்நிகழ்ச்சி 26—2—1979 அன்றே இரவு 11-30 மணிக்கு பிராது செய்யப்பட்டது. பாலையூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 32/79-ல் இ.பி.கோ. 302 பிரிவின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்துவருகிறது. இக்கொலை நக்ஸல்பாரிகளால் செய்யப்பட்டது எனக் கருதப்படுவதால் அதற்கென இருக்கின்ற தனிப்பிரிவு இதைப்பற்றி கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை ஏற்படுத்தி வருகிறது. ஆகையினால் அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(5) அறிக்கை அளித்தல்.

கல்லூரி ஆசிரியர்களோடு நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவைத் தலைவரவர்களின் முன்னிலையில் ஆசிரியர்கள் போராட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் அறிக்கை தந்தால் நலம் என்று சொன்னார்கள். அப்பொழுது அமைச்சர் இல்லை என்ற பதில் வந்தது. இப்பொழுது அமைச்சரவர்கள் இருக்கிறார்கள், எனவே ஒரு அறிக்கையை வைப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சரவர்கள் அறிக்கை இருந்தால் இப்பொழுது கொடுக்கலாம், பிறகு கொடுக்க வேண்டுமென்றாலும் கொடுக்கலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள கல்லூரி ஆசிரியர்கள் சில கோரிக்கைகளை எழுப்பி 19—2—1979 முதல்